[1979 ஏப்ரல் 28

சின்கோனா துறை

* வினா எண் 865—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு செய்தி அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

'சின்கோனா' துறையினை தனி அமைப்பாக ஏற்படுத்தும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): சின்கோனாத் துறையை தனி அமைப்பாக மாற்றும் திட்டம் ஏதும் இப்போது இல்லை. சின்கோனா துறையினை நிர்வகிக்க ஒரு ஆட்சிக்குழு அமைப்பை அரசு இப்பொழுது ஏற்படுத்தியுள்ளது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆட்சிக் குழுவில் யார் யார் உறுப்பினர்களாக உள்ளார்கள். அவர்களுக்கு என்ன ஊதியம்; அது எப்படி செயல்படுகிறது; அதிலே ஏற்படும் நன்மைகள் என்ன என்பதைப் பற்றி விவரமாகத் தெரிவிக்க இயலுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் அவர்களே, அரசு அரசாணை நிலை எண் 156, வன மற்றும் மீனளத் துறை தேதி 2—3—1979-ல் சின்கோனாத் துறையை நிர்வகிக்க ஒரு ஆட்சிக்குழு அமைப்பினை ஏற்படுத்தியது. இவ்வாட்சிக்குழு 1—4—1979 லிருந்து இயங்கி வருகிறது. இந்த ஆட்சிக்குழு அமைப்பில் செயலாளர், வன மீனளத் துறை தலைவராகவும், செயலாளர், நிதித்துறை அல்லது அவர் நியமித்த ஒரு அதிகாரி ஒரு உறுப்பினராகவும், செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை ஒரு உறுப்பினராகவும், வனத்துறை தலைவர் (பொது) ஒரு உறுப்பினராகவும், இயக்குநர் சின்கோனாத்துறை, உறுப்பினராகவும் செயல ராகவும், சின்கானாத துறையில் வல்லுநர்களாக உள்ளவர்களில் ஒருவர் இவ்வாட்சிக் குழுவில் நியமிக்கப்பட்டு அவர் ஆலோசனையும் பெறப்படும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரங்களைப் பொருத்தவரையில் இவ்வாட்சிக்குழு மாதம் ரூபாய் 2,500-க்கு மேற்படாத வகையில் பதவிகள் உருவாக்கலாம். இவ்வதிகாரம் தமிழ்நாடு பொதுப்பணி ஆணைக்குழுவின் அதிகாரத்திற்குட்பட்ட பதவி களுக்குப் பொருந்தாது. அரசிதழ் பதிவு அலுவலர்களின் நியமனம் அரசின் கருத்தினை பெற்ற பிறகுதான் நியமிக்க வேண்டும். இக் குழு ரூபாய் 25 லட்சத்திற்கு மேற்படாத தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலை சம்பந்தமான

1979 ஏப்ரல் 28]

வேலைகளை ஏற்று நடத்தலாம். மற்ற இனங்களில் ரூபாய் 5 லட்சத்திற்கு மேற்படாமல் செலவு செய்யலாம். துறையின் பணிகள் துரிதமாக முடிக்கப் போதுமான நிதி சம்பந்தமான அதிகாரங்கள் பகுதி அதிகாரிகளுக்குத் தரலாம்.

சின்கோனா மற்றும் துறையின் பொருட்களின் விலையினை நிர்ணயிக்கவும் அவைகளின் விற்பனையை ஏலத்தில் அல்லது ஒப்ப அறிவிப்பு மூலமாகச் செய்யலாம்.

விசேட வேலைகளுக்காக ஊக்கப் பரிசுகள், முன் பணச் சம்பள உயர்வு முதலியவைகளை ஊழியர்களுக்கு அளிக்கலாம். அரசிதழ் பதிவு அலுவலர் களை தோட்டங்களிலிருந்து தொழிற்சாலைக்கு மாற்றும்பொழுது தலைவரின் உத்தரவு பெற்றுத்தான் மாற்றவேண்டும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தற்பொழுது சின்கோனா நிர் வாகத்தை ஒரு டைரக்டர் மற்றும் அவர்களுடைய கீழ் உள்ள அதிகாரிகள் இதுவரையில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் என்ன கெடுதலை அல்லது என்ன தவறுகளை கண்டு இந்தப் புதிய ஏற்பாடு ஏற்படுத் தப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அது எப்படி சரியாகும்? நீங்கள் தான் சொல்லவேண்டும். எங்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருக்கு நான் ஒன்று சொல்கிறேன், அமைச்சர் அவர்கள் அவசரமாகப் போயிருக்கிறார், அமைச்ச ருக்கு பதில் அவருடைய செயலாளர் பதிலளிக்கிறார், நடைமுறையில் நிர்வா கத்தை நடத்தும் அமைச்சருக்குத்தான் விவரங்கள் தெரியும், நீங்கள் அமைச்சர் வந்த பிறகு கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கேள்வி சம்பந்தப்பட்ட வரை யிலும் 2, 3 துணைக் கேள்விகளுக்குத் தயாராக வைத்துக்கொள்ளும் வகையில் தான் வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது, அப்படி இருக்கையில் தனிக் கேள்வி எதற்கு?

[1979 ஏப்ரல் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் கேட்கிற கேள்விக்கு பதிலளிக்க விவரங்கள் அவரிடம் இல்லை. ஆகவே அமைச்சர் வந்த பிறகு கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னேன்.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, இந்த சின்கோனா துறை லாபத்தில்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்தத் துறையிலே அதற்கு வேண்டிய ஒரு ஆட்சிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அந்தக் குழுவிலே அஃபிசியல்ஸ் எத்தனை பேர், நான்-அஃபிசியல்ஸ் எத்தனை பேர்? அஃபிசியல்ஸ் என்று சொல்லும்போது ரிட்டயர் ஆன அஃபிசியல்ஸ் அதில் இருக்கிறார்களா, எத்தனை பேர்? யார், யார்? என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக் குழுவிலே யார், யார் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்று ஏற்கெனவே நான் சொல்லி விட்டேன்.

காட்டுமன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்

*வினா எண் 866—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள காட்டுமன்னார்குடி ஒன்றியத்தை காட்டுமன்னார்குடி, ஸ்ரீமுஷ்ணம் (திருமலை) ஒன்றியம் என இரு ஒன்றியங்களாகப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) இதுபற்றி அவ்வொன்றியத்திலிருந்து ஏதேனும் தீர்மானம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) & (இ) இவ்வினாக்கள் எழவில்லை.